# அவரே இராஜா




இன்று உலகம் முழுவதும் ஒரு புறம் அறிவியல் வளர்ச்சியும், தொழில் வளர்ச்சியும், அதீநவீன கண்டுபிடிப்புகளும், மக்களுடைய வாழ்க்கை தரத்தை பெரும் அளவிற்கு முன்னேற செய்துள்ளது. குறிப்பாக கடந்த 50 வருடத்திற்குள் மிகப்பெரிய மாற்றத்தை மனித சமுதாயம் சந்தித்திருக்கிறது. இன்று நாம் உலகின் எந்த மூலையில் இருப்பவரிடத்திற்கும் உடனடியாக தொடர்பு கொள்ள முடியும், வெவ்வேறு இடத்தில் இருந்தாலும் ஒன்றிணைந்து ஒரு காரியத்தை தொழில்நுட்ப வசதியோடு செய்யமுடியும். விண்வெளி ஆராய்ச்சி, மருத்துவம் போன்றவற்றில் மிகப்பெரிய வளர்ச்சி ஏற்ப்பட்டுள்ளது. எனவே உலகத்தில் ஏதோ ஒரு மூலையில் இருந்தாலும், உலக முழுவதும் தன் கையில் இருக்கும் சிறு ஸ்மார்ட் போனில் இருப்பதாக மனிதன் உணர்கிறான்.

ஒருபுறம் இவையாவும் மனித சமுதாயத்தின் வளர்ச்சியை காட்டினாலும், முன்பு இருந்த கட்டுக்கோப்பான மனித சமுதாயத்தையோ, பண்பாட்டையோ இன்று காணமுடியவில்லை. இதற்கு சிறந்த உதாரணம் நம் இந்திய நாடேயாகும். இளைய சமுதாயத்தின் கல்வி தரமும், வாழ்க்கை தரமும் உயர்ந்திருந்தாலும், வாழ்க்கையை குறித்த உண்மையான அர்த்தத்தை மறந்துவிட்டு மனம்போல் ஒருநாள் வாழ்வை இன்பமென்று எண்ணி வாழும் வாழ்க்கைநிலை உள்ளது. எல்லாருக்கும் எல்லா சுதந்திரமும் உண்டு, யாரும் யாருக்கும் அடிமையில்லை என்பதை போன்ற கருத்து பரவி வந்தாலும், சத்துருவாகிய பிசாசானவன் சில மனுஷீக அதிகாரங்கள் மூலமாக, அரசாங்கங்கள் மூலமாக மனிதரை

அடிமைபடுத்த நினைக்கிறான், மனிதர்களை தேவனை விட்டு திருப்பி, அவர்களுக்கு ஆண்டவர் தேவையில்லை என்றோ அல்லது முக்கியமானவர் அல்ல என்றோ போதித்து, ஆண்டவரை காட்டிலும் தேவையான காரியங்கள் உள்ளது என்றும் அதுவே வாழ்க்கைக்கு போதுமானது என்றும் போதிக்கிறான்.

உதாரணமாக, வேதம் வாசிக்காமல், ஜெபிக்காமல், தேவ ஐக்கியம் இல்லாமல் இருப்பதை பலர் ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை, ஆனால் அவர்களால் செல்போன் இல்லாமல், அதின் மூலம் மற்ற மனிதரோடு கிடைக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கமுடிவதில்லை. மனிதர்களின் வாழ்க்கையில் சில காரியங்களை தந்திரமாக கொண்டு வந்து, அதற்கு அவர்களை பழக்கப்படுத்தி, பிறகு அடிமைப்படுத்தி, இறுதியில் உன் வாழ்க்கைக்கு தேவன் வேண்டுமா அல்லது இவ்வுலக பொருள் வேண்டுமா என்பதை போன்ற நிர்பந்தமான நிலைமைக்கு மனிதர்களை தள்ளிவிடுகிறான். இதனால் தேவனை பற்றிய சிந்தையோ, பரிசுத்தம், ஒழுக்கம், உண்மை போன்ற காரியங்களையோ மனிதர்கள் பெரியதாக எடுத்து கொள்வதில்லை.

சில பொருட்களை கொண்டு இயங்கும் இயந்திரம்போல் மனிதவாழ்வு மாற்றப்பட்டுவிட்டது. இதனை சத்துரு சில மனித அதிகாரங்கள் மூலமாகவே செய்கிறான். பிசாசின் நயவஞ்சகத்தினால், அவனால் ஏவப்படும் மனிதர்கள் செய்யும் செயலினால் பலர் நரகத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றனர். மீட்கப்பட்ட மக்களும் இப்படிப்பட்ட நயவஞ்சக வலையில் வீழ்ந்து போகின்றனர். நம் இந்திய தேசத்திலும், நாட்டின் பாதுகாப்பு என்ற போர்வையில் ஒவ்வொரு மனிதரும் அரசாங்கத்தில் உள்ள சில தனி மனிதர்களின் கட்டுபாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் கூறியிருப்பது போல எதை வாங்கினாலும், விற்றாலும் அல்லது வேறு எந்தவொரு செயலை செய்தாலும் அவையாவும் கண்காணிக்கப்படுகிறது **(வெளி 13:16,17)**.

ஒரு புறத்தில் ஊழலை ஒழிக்க, வெளிப்படை தன்மை இருக்க இவை எல்லாம் செய்யப்படுகிறது என்று கூறப்பட்டாலும், இவையாவும் இனி வாழ்வின் ஒவ்வொரு காரியத்திற்கும் இறைவனை நம்பி அல்ல, எங்களை நம்பியே நீ இருக்கிறாய் என்ற ஒரு அதி பயங்கரமான சூழலே உருவாகிகொண்டிருக்கிறது. சில மனிதர்களாகிய நாங்கள் நினைத்தால் நீ ஒருவேளை உணவை கூட உண்ணமுடியாதபடி உன் நிலைமையை மாற்றமுடியும் என்ற சூழ்நிலையே உருவாகிக்கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட தனி மனிதர்கள் சக மனிதர்களை அடிமைப்படுத்தி ஆள

நினைக்கின்றனர். அன்று நேபுகாத்நேச்சார் பொற்சிலையை செய்து அனைவரும் பணிந்துகொள்ள வேண்டும் என்று கட்டளையிட்டது போல், இன்று கோடிக்கணக்கான மக்களை சில மனுஷீக அதிகாரங்கள் அடிமைப்படுத்த நினைக்கின்றன. இவை யாவும் பிசாசின் ராஜ்யத்தினால் ஏற்ப்படுத்தப்பட்ட சிறு இராஜாக்களை போல மனுஷர் மேல் துரைத்தனம் பண்ணுகின்றன.

இன்று நமது இந்திய தேசத்திலும் உள்ள பல குழப்பமான சூழ்நிலைகளுக்கு இப்படிப்பட்ட காரியங்களே காரணமாகும். இவற்றை எல்லாம் ஆண்டவர் அமைதியாக பார்த்துக்கொண்டு தான் இருக்கிறார், ஏனெனில் அந்திகிறிஸ்துவின் காலத்திற்கு உலகத்தை ஆயத்தப்படுத்த அவனால் ஏவப்பட்ட இப்படிப்பட்ட மனுஷீக வல்லமைகள் மிக தந்திரமாக கிரியை செய்துகொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு தேவபிள்ளைக்கு, பரலோக இராஜ்யத்தின் பிரஜைக்கு ஆண்டவரே என்றென்றும் இராஜாவாக இருக்கிறார். ஒரு தேவபிள்ளையின் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு காரியமும் தேவ சித்தத்திற்கும், திட்டத்திற்கும் உட்பட்டே நடைபெறும். ஆண்டவரின் அதிகாரத்திற்கு உட்பட்டே மனித அதிகாரங்களுக்கு கீழ்படிவரே தவிர, ஒரு போதும் அதைவிட்டு வெளியே செல்லமாட்டார்கள். ஏனெனில் அவரே மெய்யான கர்த்தாவும், இராஜாதி இராஜாவுமாய் இருக்கிறவர். இது சத்துருவாகிய பிசாசானவனுக்கும் அவனால் ஏவப்படும் மனிதர்களுக்கும் தெரியும். ஆனாலும் தங்களுக்கு காலம் இருக்கும் மட்டும் எவ்வாறெல்லாம் மனிதர்களை வஞ்சிக்க முடியுமோ அவ்வாறெல்லாம் வஞ்சிக்க பார்பான்.

**யோவான் 19:10,11** வசனங்களில் பிலாத்து ஆண்டவரிடத்தில் உன்னை சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைப்பண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்று கூறினபொழுது, பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது என்று பதில் கூறினார். இந்த வார்த்தைகள் மிகமிக முக்கியமானது. நாம் கடந்துபோய் கொண்டிருக்கிற பாதை எப்படிப்பட்டது என்றாலும், நாம் தேவனோடு ஐக்கியப்பட்டு அவரை நமது இராஜாவாக கொண்டிருப்போமானால், நம் வாழ்க்கையில் நாம் சார்ந்திருக்கிற யாவும் தேவனுடைய அதிகாரத்திற்கு உட்பட்டே இருக்கும்.

அதாவது தேவனால் அனுமதிக்க பட்டாலொழிய வேறெதுவும் நம் வாழ்க்கையில் நம்மை கட்டுபடுத்தமுடியாது. நாம் இவ்வுலகத்தில் வாழ்ந்தாலும், பரலோக இராஜ்யத்தின் பிரஜைகளாகவே வாழ்கிறோம். எனவே நாம் அரசாங்கத்தின் மூலமாகவோ, சில தனிப்பட்ட மனிதர்களின் மூலமாகவோ நம்மேல் திணிக்கப்படும் எந்த காரியத்தை குறித்தும்

பயப்பட தேவையில்லை. நம் இராஜாவாகிய இயேசு கிறிஸ்து அவற்றிற்கெல்லாம் நம்மை விலக்கி மீட்டு கொள்வார். ஆமென் அல்லேலூயா.